# இசுசூ குழு மனித உரிமைகள் கோட்பாடு

இசுசூ  குழுவாகிய நாங்கள் மேலாண்மைத் தத்துவ அமைப்பில் [ISUZU ID] குறிப்பிடபட்டுள்ள PURPOSE [நோக்கம்], VISION [பார்வை] மற்றும் [MISSION] பணியை உணர்ந்து கொள்வதற்காக எங்கள் வணிக செயல்பாடுகளின் மூலம் பல்வேறு சமுகப்பிரச்சினைகளைத் தீர்க்கப் பணியாற்றி வருகிறோம்.

ஒவ்வொரு தனிநபரின் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதே இந்த நடவடிக்கைகளின் அடிப்படை என்று நாங்கள் நம்புகிறோம், நாங்கள் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச விதிமுறைகளின் அடிப்படையில், மனித உரிமைகளை மதிக்கும் பெருநிறுவன காலாசாரத்தை வளர்ப்பதன் மூலமும் அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் மனித உரிமைகளை மதிக்கும் முன்முயற்ச்சிகளை ஊக்குவிப்பதன் மூலமும் மனித உரிமைகளை மதிக்கும் நமது பொறுப்பை நிறைவேற்றுவோம்.

இசுசூ குழுவின் மனித உரிமைகள் கொள்கை (இனி கீழே " இந்த கொள்கை" எனக் குறிப்பிடப்படுகிறது). இசுசூ மோட்டார்சின் இயக்குனர்கள் குழுவால் அங்கிகரிக்கபட்டுள்ளது.

## பொருள்

1. இசுசூ குழும வணிகத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து நிர்வாகிகள், பணியாளர்கள் மற்றும் தற்காலிக பணியாளர்களுக்கு (இனி ." நிர்வாகிகள், பணியாளர்கள் " எனக்) குறிப்பிடப்படும் இந்தக் கொள்கை பொருந்தும்.
2. எங்கள் வணிக கூட்டாளர்கள் இந்தக் கொள்கையைப் புரிந்துகொண்டு ஆதரவளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

## சர்வதேச விதிமுறைகள் ,சட்டங்கள்,குழு விதிமுறைகள் போன்றவற்றுடன் இணங்குதல்

1. மனித உரிமைகளை மீறாமல், நமது வணிகச்செயல்பாடுகள் தொடர்பான மனித உரிமைகள் மீதான எதிர்மறையான தாக்கங்களை நிவர்த்தி செய்வதன் மூலம் மனித உரிமைகளை மதிக்கும் எங்கள் பொறுப்பை நிறைவேற்றுவோம்.
2. மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச விதிமுறைகளை நாங்கள் ஆதரிக்கிறோம் மற்றும் மதிக்கிறோம்.(உதரணமாக சர்வதேச மனித உரிமைகள் மசோதா) , சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அடிப்படை கோட்பாடுகள் மற்றும் வேலையில் உள்ள உரிமைகள் குறித்த பிரகடனம், மற்றும் வணிகம் மற்றும் மனித உரிமைகள் போன்றவற்றில் ஐக்கிய நாடுகளின் வழிகாட்டுதல் கோட்பாடுகளை

நாங்கள் ஆதரிக்கிறோம் மதிக்கிறோம்.மேலும் இந்த விதிமுறைகளின் அடிப்படையில் முயற்சிகளை தீவிரமாக செயல்படுத்துகிறோம்.

3. நாங்கள் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நாடு அல்லது பிராந்தியத்தின் கீழ் வரும் நாடு அல்லது பிராந்தியத்தின் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவோம்.மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச விதிமுறைகள், சட்டம் மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுடன் முரண்படும்போது, ஒழுங்குமுறைகளுக்கு இணங்கி, சர்வதேச அளவில் அங்கிகரிக்கப்பட்ட மனித உரிமைகளை மதிக்கும் வழிகளை தேடி மேற்கொள்வோம்.

## மனித உரிமைகள் மேம்பாட்டு அமைப்பு மற்றும் மனித உரிமைகளின் விடா முயற்சி

1. நாங்கள் வணிக நடவடிக்கைகளில், மனித உரிமைகளுக்கான மரியாதையை திட்டமிட்டபடி முறையாகவும் தொடர்ச்சியாகவும் மேம்படுத்துவதற்க்கான அமைப்பை நிறுவி, மனித உரிமை பிரச்சனைகளைத் தீர்க்க தீவிரமாகச் செயல்படுவோம்.
2. மனித உரிமைகள் மீதான எதிர்மறையான தாக்கங்களை புரிந்து கொள்ளவும் மதிப்பீடு செய்யவும் தடுக்கவும் குறைக்கவும் எங்கள் முயற்ச்சிகளின் செயல்திரனைச் சரிபார்க்கவும் மேம்படுத்தவும் தொடர் வாழிமுறைகளை (மனித உரிமைகள் காரணமாக விடாமுயற்சி) நிறுவியுள்ளோம்.மேலும் இந்த வழிமுறைகளை நாங்கள் தொடர்ந்து செயல்படுத்துவோம்.
3. மனித உரிமைகள் மீதான எதிர்மறையான தாக்கங்களைத் தடுக்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம் ,மேலும் எங்களது வணிகச் செயல்பாடுகள் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தியது அல்லது பங்களித்தது உறுதி செய்யபட்டால், உரிய நடைமுறைகளின் மூலம் உடனடியாக நடவடிக்கை எடுப்போம்.சரிசெய்து நிவாரணம் வழங்க பணியாற்றுவோம்.
4. எங்களது பங்குதாரர்களின் மனித உரிமைக் கவலைகளை புரிந்துகொள்வதற்கும் பதிலளிப்பதற்க்கும் பயனுள்ள அறிக்கையிடல் மற்றும் புகார்களை கையாளும் வழிமுறைகளில் நாங்கள் பணியாற்றுவோம்.

## கல்வி

எங்கள் நிர்வாகிகள் மற்றும் பணியாளர்களுக்கு எங்களது கொள்கைகளின் அடிப்படையிலான நடவடிக்கைகளை பின்பற்றி செயல்படுத்துவதற்க்கான தகுந்த பயிற்ச்சியை தொடர்ந்து அளிப்போம்.

## உரையாடல் மற்றும் ஆலோசனை தகவல் வெளிப்படுத்தல்

1. இந்த கொள்கையின் கீழ் முன்முயற்சிகள் தொடர்வது குறித்து, நாங்கள் சுதந்திரமான வெளிப்புற மனித உரிமை நிபுணத்துவத்தைப் பயன்படுத்துவோம் மற்றும் ஆலோசனையில் தொடர்ந்து ஈடுபடுவோம்.
2. மனித உரிமைகளை மதிக்கும் எங்கள் முயற்சிகளின் விவரங்கள் மற்றும் முடிவுகள் பற்றிய தகவல்களை நாங்கள் தொடர்ந்து வெளியிடுவோம்.

பிப்ரவரி 25,2022

அன்று நிறுவப்பட்டது

டிசம்பர் 22,2023

அன்று திருத்தப்பட்டது

இசுசூ மோட்டார்ஸ் co.ltd

பிரதிநிதி, இயக்குனர், தலைவர் மற்றும் சிஇஒ

ஷின்சுகே மினாமி

